





**We Shine Academy™**

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## நவம்பர் - 02.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- பொருளாதார நிகழ்வுகள்













## இந்திய நிகழ்வுகள்

- புது டெல்லியின் DRDO பவனில், இணையவழியில் புத்தாக்கம் **(Cyber Innovation),** இணையப் பாதுகாப்பு **(Cyber Security),** சவால்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் மீதான ஒரு நாள் மாநாடானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் **(DRDO – Defence Research and Development organisation)** தலைமையில் நடைபெற்றுள்ளது.

- **சத்தீஸ்கரின் ராய்ப்பூரில்,** இளைய தலைமுறையினர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளில் கவனம் செலுத்துவதற்காக 8 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இளம் புத்தாக்குநர் திட்டம் 2018 **(YIP – Young Innovators Programme)** எனும் **அறிவியல் மற்றும் தொழில்நுட்ப போட்டியானது, IIT – கரக்பூர்** சார்பில் நடத்தப்பட்டுள்ளது.

- சுகாதாரத்தில் காந்திய சித்தாந்தத்தையும் ஸ்வச் பாரத் திட்டத்தின் மூலம் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக **'காந்திய சிந்தனைகள் மற்றும் சுகாதாரம் (Gandhian Thoughts and Sanitation)** என்னும் கருத்தரங்கு மகாராஷ்டிராவின் வார்தா மாவட்டத்தில் குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்பட்டது.

## உலக நிகழ்வுகள்

- அயர்லாந்தில் நடைபெற்ற அதிபருக்கான தேர்தலில், 56 சதவீதம் வாக்குகளைப் பெற்று **மைக்கேல் டி ஹிக்கின்ஸ் Michael D Higgins** மீண்டும் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - 2011ம் ஆண்டிலிருந்து அதிபராக பதவி வகிக்கும் ஹிக்கின்ஸ் மேலும் 7 ஆண்டுகளுக்கு பதவிவகிக்க உள்ளார். இவர் அயர்லாந்தின் 9வது அதிபராவார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **எகிப்தின் ஷாரம் எல் ஷேக்கில்** Egypt Open in Sharm El Sheikh நடைபெற்று வரும் **2018ம் எகிப்து இளையோர் & சிறுவர் ஓபன் மேசை பந்தாட்டப்** போட்டித் தொடரில், மினிகேடட் **சிறுவர் ஒற்றையர் பட்டத்தை**, ITTF Egypt Junior & Cadet Open இந்தியாவின் **விஷால் ராஜ்வீர் ஷா, Vishal Rajveer Shah** எகிப்தின் முஸ்தாபாவை தோற்கடித்து வென்றுள்ளார்.

- ஓமனின் மஸ்கட் நகரத்தில் நடைபெற்ற ஆசிய **ஹாக்கி சாம்பின்ஸ் டிராபி இறுதிப் போட்டியில் இந்தியாவும், பாகிஸ்தானும்** கூட்டாக இணைந்து வெற்றி பெற்றுள்ளது.
  - கடுமையான மழையின் காரணமாக **இந்தியாவும், பாகிஸ்தானும் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ்** டிராபியின் கூட்டு வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- அமெரிக்காவின் மிக்சிகன் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் டிவிட்டர் மற்றும் முகநூல் போன்ற சமூக வலைதளங்களில் உலவும் போலியான தகவல்களை கண்காணிக்க வலைதளம் அடிப்படையிலான கருவி ஒன்றை உருவாக்கியுள்ளனர்.
  - **இப்பி குவாஷண்ட் (Iffy Quotient)** என்றழைக்கப்படும். ஹெல்த் மெட்ரிக் தளத்தை பயன்படுத்தி இக்கருவியானது போலிச் செய்திகளை தடுக்கிறது.

## பொருளாதார நிகழ்வுகள்

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது 2022ம் ஆண்டில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்காக **FAIDF (Fisheries and Aquaculture Infrastructure Development Fund)** மீன்பிடித் துறை மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி என்ற நிதியை உருவாக்க ஒப்புதல் அளித்துள்ளது.
  - இம்மேம்பாட்டு நிதியானது, நீலப்புரட்சியின் **(Blue Revolution)**

கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

- தேர்தல் நிதிப் பத்திரங்களை வழங்குவதற்கும் அப்பத்திரங்களை ரொக்கமாக மாற்றுவதற்கும் **பாரத ஸ்டேட் வங்கிக்கு (SBI)** அங்கீகாரம் அளித்து மத்திய அரசு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.
  - **தேர்தல் நிதிப் பத்திரத் திட்டம் 2018ன்** விதிமுறைகளின் படி, இந்தியாவின் குடிமகன் அல்லது இந்தியாவில் இணைக்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட எந்த நிறுவனமும், தேர்தல் நிதிப் பத்திரங்களை வாங்கலாம்.
  - இந்த தேர்தல் நிதிப்பத்திரமானது வழங்கப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
- குறிப்பு
  - இப்பத்திரத்தை, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் கடந்த தேர்தலில் பதிவு செய்யபட்ட மொத்த வாக்குகளில் 1 சதவிகிதத்திற்கும் அதிகமான வாக்குகள் பெற்ற கட்சிகள் மட்டுமே பெற இயலும்.

We Shine Academy™